சிட்டகாங் வீரர்கள்

3

★

ஆசிரியை :

கல்பனா தத்

★

வெளியிடுவோர் :

இந்திய கம்யூனிஸ்டு கட்சி

தமிழ்நாடு கமிட்டி

1/6, டேவிட்ஸன் தெரு, ஜி. டி., சென்னை.

ஜனவரி 1946] [விலை அணா 2.

முன்னுரை

....

சிட்டகாங் ஆயுத தளவாடசாலை சூறையாடப்பட்டது. சுதந்திரத்தை நோக்கி நம் நாடு முன்னேறிச் செல்லும் பாதையில் இந்த நிகழ்ச்சி உணர்ச்சி யூட்டக்கூடிய மகத்தான நிகழ்ச்சி இந்தப் புத்தகத்தில், ஆயுதச் சாலையைத் தாக்கிய வீரர்களைப்பற்றி அதே தாக்குதலில் பங்கெடுத்துக் கொண்டவரான கல்பனா தத்தினால் எழுதப்பட்டக் கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன. இதைப் படிப்பதால் அவர்கள் ஒவ்வொருவரையும் நாம் நேசிக்க ஆரம்பிக்கிறோம்; நம் தேசபக்தியையே தீட்டிக் கூர்மையாக்குகிறோம்; நம் புராதன தேசத்தின் எதிர்கால சுபீட்சத்தில் அளவு கடந்த நம்பிக்கையை வைக்க ஆரம்பிக்கிறோம். அவர்கள் வங்க மத்தியதர வர்க்கத்தில் உதித்த இளைஞர்கள்; வாலிபர்கள்; வயதான மனிதர்கள். நாம் போற்றிப் புகழும் நற்குணங்களே உருவமெடுத்து வந்தாற்போல் அவர்கள் திகழ்ந்தார்கள்; நம்மில் வெகு சிலருக்கே உள்ள உன்னத தைரியத்துடன் அவர்கள் போராடினார்கள். கல்பனா தத் தன்னுடைய சொந்த அனுபவங்களிலிருந்து சுற்றி வளைக்காமல் தெளிவாக எழுதுகிறார். எந்த லக்ஷியம் அவர்களுக்கு உணர்ச்சியூட்டி ஊக்க மூட்டியது? எந்த லக்ஷியம் அத்தகையத் தோழமைக் கட்டினால் அவர்களைப் பிணைத்துவளர்த்தது? இதையெல்லாம் கல்பனா தத் தெளிவாகக் கூறுகிறார். இந்த நினைவுத் திரட்டைப் படிப்பதால், அந்த கோஷ்டிகளின் தலைவர்கள் ஏன் புராண இதிகாசங்களில் வரும் பெயர்களைப்போல் ஜனங்களிடையே பேசப்படுகின்றனர் என்பதையும், எப்படி அவர்களுடைய பெயர் ஒவ்வொரு வீட்டிலும் மரியாதையுடன் உச்சரிக்கப்படும் பெயராக இருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

கல்பனா தூக்கிலிடப்படுவதற்கிருந்தார். சின்னஞ்சிறு சிறுமியாக இருந்ததனாலேயே அவருடையத் தூக்கு தண்டனை ரத்து செய்யப்பட்டது. நம் பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் அவரை ஆயுள் பூராவையும் சிறையில் கழிக்கும்படி தண்டனையை மாற்றியது. ஆனால் நம் ஜனங்கள் அவருடைய விடுதலையைப் பெற்றனர். சின்னஞ்சிறு சிறுமியாக சிறைக்குச் சென்ற அவர், ஆறு வருடங்கள் சிறையில் கழித்தப்பிறகு, யௌவன ஸ்திரியாக வெளியே வந்தார்.

வேலை செய்யும்போதே எப்படி கொஞ்சம் கொஞ்சமாக நம் கட்சியால் ஆகர்ஷிக்கப்பட்டார் என்பதை இதில் அவர் வர்ணிக்கிறார். அவருடைய சொந்த வாழ்க்கையைப் படிப்பது நம் தேசிய இயக்கத்தில் ஜீவனுள்ள ஒரு கட்டத்தைப் படிப்பதாகும். எப்படி ஆரம்ப பயங்கரவாதக் கைதிகள் கம்யூனிஸ்டுகளாக மாறினார்கள் என்பதை அறிந்துகொள்வதாகும். அவர்கள் நம் கட்சியின் கொடியின்கீழ் வந்தது சுலபமான, அதே சமயத்தில் கடினமான ஒரு காரியம், சுலபமானது, ஏனெனில் நம் கட்சியின் கொள்கையிலும் நடைமுறைத் திட்டத்திலும் தங்களுடைய புரட்சிகரமான போராட்டக் கனவுகளை இன்னும் தெளிவான விஞ்ஞான முறையில் வகுக்கப்பட்டதாகக் கண்டார்கள். கடினமானது. ஏனெனில் தாங்கள் கொண்டிருந்த பிரமைகளையெல்லாம் ஒழித்துவிட்டு தாங்கள் செய்தவற்றில் என்னென்ன தவறுகளைச் செய்தார்கள், எதெதில் தங்களைத் திருத்திக்கொள்ளவேண்டும், தாங்கள் வாழ்க்கையையே அர்ப்பணம் செய்திருக்கும் தேசத்தின் சுதந்திரப் போராட்டத்திற்காக எவ்விதம் தொடர்ந்து போராடுவது என்பனவற்றைப்பற்றி தாங்களே அலசி ஆராய்ந்து முடிவிற்கு வரவேண்டியிருந்தது. அவர்களுடைய அனுபவங்களால் முதிர்ந்த வயதில் கம்யூனிஸத்தின், குழந்தைப் பருவமாக எப்படி பயங்கரவாதம் இருந்தது என்பதை இந்த நினைவுத் திரட்டிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

சிட்டகாங் ஆயுத தளவாடச்சாலை தாக்குதலில் பங்கெடுத்துக் கொண்டதினால் இன்று சிறைகளில் வாடும் தலைவர்களும் சரி, சிறைக்கு வெளியில் இருக்கும் அவர்களுடைய சிஷ்யர்களும் சரி இன்று அநேகமாக நம் கட்சியில் இருக்கிறார்கள், ஆகவே, இன்றைக்கு சிட்டகாங் வாசி ஒவ்வொருவனும் "சூர்யா சென்னின் பரம்பரை" என்றும், "சிட்டகாங் பரம்பரை" என்றும் எதைக் குறித்து பெருமையுடன் பேசுகிறானோ, அதன் சரித்திரப் பூர்வமான வாரிசே எங்கள் கட்சி.

சிட்டகாங்கிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் கல்பனா தத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் செல்லப் பெயர் "**அமர்மயி**" அதாவது "நம்ம பெண்" என்று அர்த்தம். இந்த சிட்டகாங்கின் புத்திரி திரும்பவும் தன்னுடைய பெற்றோர்களான சிட்டகாங் மக்களின் தீர்ப்பைப் பெறுவாள். வருகிற மாகாண தேர்தலில் கம்யூனிஸ்ட் அபேக்ஷகராக நிற்கிறாள்.

பி. ஸி. ஜோஷி.

AMBIKA CHAKRAVARTY

அம்பிகா சக்ரவர்த்தி

அம்பிகா சக்ரவர்த்தி

....

சிட்டகாங் ஆயுத சாலைத் தாக்குதல் வீரர்களின் தலைவர்களில் சிலரை நான் கண்டது கிடையாது. ஆனால் அவர்களைப் பற்றி கேட்டிருக்கின்றேன். அத்தகைய தலைவர்களில் **அம்பிகா சக்ரவர்த்தி** ஒருவர்.

நான் சிட்டகாங் புரட்சி வீரர்களின் கூட்டத்தில் சேரும் பொழுது எனக்கு இளம் வயதுதான். மற்றவர்களும் பெரும்பாலும் என்னைப் போன்ற இளம் பிராயத்தினரே. அவர்களுடைய மனதில் அம்பிகா, ஒரு புதிராகத் தோன்றினர். அவர் நீண்ட தாடியை வைத்துக் கொண்டிருந்தார். மற்ற தலைவர்களுக்கும் அவருக்கும் வித்தியாசமாகக் காணப்பட்ட அடையாளம் அதுதான்.

அனுசீலன் கோஷ்டி என்று இன்னொரு புரட்சி கோஷ்டி இருந்தது. எங்களுடைய கோஷ்டி வேறு, அவர்களுடையது வேறு. அவர்களுடைய தலைவர் ஒருவருக்கு ஒரு கால் நொண்டி. அவர் பெயர் **சாருபிரகாஷ் தத்**. எங்கள் கோஷ்டியார் அந்த கோஷ்டியாரைச் சந்திக்கும் பொழுதெல்லாம் அவர்களைப் பார்த்து, "நொண்டித் தோட்டம்" என்று கத்துவார்கள். அம்பிகா வைத்திருந்த தாடியினால் எங்கள் கோஷ்டிக்கு ஒரு புனைப் பெயர் கொடுத்து எங்களைக் கூப்பிட அனுசீலன் கூட்டத்தாருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. "தாடிச் சதுக்கம்" என்று எங்களை அழைப்பார்கள்! இந்த மாதிரி "தாடிச் சதுக்கம்" என்று பட்டம் சூட்டப்பட்டுக் கூப்பிடப்பட்டால் இந்த தாடி சமாசாரத்தைப் பற்றி அறிய ஆவல் ஏற்படுவது இயல்புதானே!

நான் தலைமறைவாக வாழ்ந்த காலத்தில் அம்பிகாவைப்பற்றி மாஸ்டர் தா (சூர்யாஸென்) விடம் நான் வினவுவதுண்டு. "நம்மிடமுள்ள எஃகு வீரன் அம்பிகா தா. சந்தோஷத்தாலோ துக்கத்தாலோ நிதானம் தவறாதபடி நிற்கும் வீரர் அவர். கொஞ்சமேனும் தன் உள்ளத்திலெழும் எண்ணத்தினால் தன் வேலை தவறமாட்டார். கவனம் குறைந்துவிடாது; வேலையில் சளைப்பு ஏற்பட்டு விடாது. பிறரிடமும் அதே மாதிரியான கவனத்தையும் சலியாத ஊக்கத்தையும் அம்பிகா பாபு எதிர்பார்ப்

பார்" என்று சூர்யா சென் கூறுவார். ஆயுத சாலைத் தாக்குதலின்போது அவருடைய உறுதியைக் கண்டேன். ஆயுத சாலை தாக்குதல் முடிந்தவுடன், போலீஸ் லைனைத் தாக்கிய கோஷ்டிக்கு உதவி அளிக்கச் செல்வது என்று திட்டமிட்டிருந்தோம். ஆயுத சாலைத் தாக்குதலில் வெற்றி அடைந்தவுடன் நம் தோழர்கள் வெற்றியைக் கொண்டாட ஆரம்பித்தனர். அம்பிகா தாவுக்கு அந்தக் கொண்டாட்டங்கள் பிடிக்கவில்லை. அனைவரையும் கூப்பிட்டார். ஒழுங்காக நிற்கச் சொன்னார். "பின்னால் வெற்றி கொண்டாடலாம். இப்பொழுது போலீஸ் லைனுக்கு ஓடுங்கள்" என்று உத்திரவிட்டார். குற்றமுள்ள நெஞ்சுடன் ஒவ்வொருவரும் அங்கிருந்து கிளம்பினர்.

அம்பிகா தாவின் தீரச்செயல்களைப்பற்றி பல கதைகள் கேட்டிருக்கின்றேன். 1924 விலோ 1926 யிலோ சிட்டகாங் ஜில்லாவிலுள்ள பஹாத்தார் வட்டத்தில் ஒரு வீட்டை போலீஸார் சூழ்ந்து கொண்டனர். மாஸ்டர் தா, அம்பிகா தா முதலியோர் அவ்வீட்டிற்குள் இருந்தனர். அவர்கள் வெடி குண்டுகளைத் தயாரித்துக் கொண்டிருந்தனர். போலீஸார் வீட்டிலுள்ளவர்களுக்குச் சவால் விடுத்து அழைத்தனர். இவ்வீரர்கள் தப்பியோடப் பார்த்தனர். போலீஸ்காரர்கள் துப்பாக்கியினால் சுடுவதற்கு ஆரம்பித்தனர். வீரர்கள் அரை குறையாகச் செய்யப்பட்ட வெடிகுண்டுகளை வீசினர்; சிறிய துப்பாக்கிகளிலிருந்து ரவை குண்டுகளைச் சுட்டனர். இந்த நடவடிக்கைக்குப் பின்னர் முன்னேறி ஓடினார்கள். திகைத்து நின்ற போலீஸ் ஓடுபவர்களின் பின்புறத்திலிருந்து சுட ஆரம்பித்தனர். ஓடிக்கொண்டிருந்த அம்பிகா கால் இடறி கீழே ஒரு பள்ளத்தில் விழுந்துவிட்டார். அதிலிருந்து அவரை எடுத்தார்கள். எடுக்கும்பொழுது பார்த்தால் உடலெல்லாம் ரவைகள் பொத்துவிட்டன. ஆள் உயிருடன் இருக்கின்றாரா என்பதே சந்தேகமாகத் தோன்றிற்று. ஒரு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். ஆள் பிழைத்தார். அதன் பின்னர் விசாரணைக்கு அனுப்பப்பட்டார்.

அவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டது. கேஸ் நடந்தது. "நான் ஒரு வழிப்போக்கன். போலீஸார் என்னையும் சுட்டுவிட்டனர்" என்று அவர் வாதித்தார். பஹாத்தர் கட்டத்து வீட்டை போலீஸார் சூழ்ந்த சமயத்தில் அவர் வேறு ஓரிடத்தில் இருந்ததாகக் கூறினார். அதை ஊர்ஜிதப்படுத்தி ருஜிப்பித்தார். சிட்டகாங்கிலிருந்த பெரிய மனுஷ்யர்கள் இந்த வாதத்துக்கு சாதகமாக சாட்சி சொன்னார்கள். கண்யமான சிட்டகாங் வாசிகளிடம் அம்பிகா போன்றவர்களுக்கு அவ்வளவு செல்வாக்கு ஏற்பட்

டிருந்தது. போலீஸ் பிடிப்பிலிருந்து அவர்களை விடுவிக்க அவர்கள் எத்தகைய உதவியையும் தருவார்கள்.

சிட்டகாங் ஆயுதசாலைத் தாக்குதல் முடிந்தபின்னர் ஜலாலபாத் குன்றில் நடந்த சண்டையில் அம்பிகா தாவுக்குப் படுகாயம். அவர் மண்டையில் ரவைகுண்டு பாய்ந்தது. அவர் இறந்துவிட்டாரென்று நினைத்து அவருடைய தோழர்கள் கைவிட்டனர். ஆனால் ஆள் சாகவில்லை; மூர்ச்சித்து வீழ்ந்துவிட்டார். பின்னர் இராக்காலத்திலடிக்கும் குளிர்ந்த காற்று அவருடைய மயக்கத்தைத் தெளியவைத்தது. பிரக்ஞை வந்தபோதிலும் ஆள் மிகவும் பலஹீனப்பட்டுவிட்டார். ஒரு அங்குலம் அசைவதற்குள் அடக்க முடியாத உடல் வலி. தான் உயிருடனிருக்கிறேனா என்பதுபற்றி அவருக்கே சந்தேகம். உயிருடன் இருக்கின்றேமா, அது எப்படி முடியும் சே, சே என் உயிர் போயிருக்கவேண்டுமே, இது என்ன என்னுடைய பூதமோ என்று எண்ணினர். சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டாமா? பரீக்ஷை பண்ண யோசித்தார்; தனது இரு புஜங்களையும் மெல்ல மெல்ல அசைத்தார். நெற்றியைத் தொட்டுப்பார்த்துக்கொண்டார். தாங்க முடியாத வலி—"அப்பாடா, நமக்கு வலி என்ற உணர்ச்சி இருக்கிறது" என்பதை நிச்சயப்படுத்திக்கொண்டார். வலி வெறும் கனவல்ல, அவர் அனுபவித்த உண்மை, கூக்குரலிடும்படி உணர்ந்த பலன். "நாம் உயிருடன் இருக்கின்றேமோ பார்க்கலாம்" என்று நினைக்க ஆரம்பித்தார். மெள்ள மெள்ள எழுந்து நிற்கப் பார்த்தார். ஆனல் எழுந்து நிற்பதற்குமுன்பே குன்றுச் சரிவில் உருண்டு விழுந்தார். கீழே ஒரு குட்டை. அதிலே விழுந்தார். கொஞ்சம் தண்ணீரைக் குடித்தார். தேகத்திலும் கொஞ்சம் பலம் வந்தது. டவுனை நோக்கிப் புறப்பட்டார். தடுமாறிக்கொண்டு ஒவ்வொரு அடிவைத்த பின்னர் அடுத்த அடி எடுத்து வைப்பதற்கு சக்தியை சேகரித்துக்கொண்டு நின்று, நின்று நகர்ந்தார்.

ஆனல் ஆயுதசாலைத் தாக்குதலுக்குப் பின்னல் ஏற்பட்ட சண்டையில் அம்பிகா சக்ரவர்த்தி உயிரிழந்தார் என்று ஊரெங்கும் செய்தி. நாங்களும் அதைத்தான் நம்பி அவ்வாறே எண்ணியிருந்தோம். திடீரென்று ஒருநாள் பாடியா கிராமத்தில் அம்பிகா கைது செயயப்பட்டார் என்ற செய்தி வந்தது. அம்பிகா உயிருடன் இருக்கிறார் என்றறிந்தவுடன் எங்களுக்கு மட்டிலா மகிழ்ச்சி ஏற்பட்டது.

கொஞ்ச நாட்களுக்குப்பின்னல் பிரக்ஞை வந்த பின்னர் அம்பிகா எங்கு போய்ச்சேர்ந்தார், எப்படி பிடிப்பட்டார் என்ற கதையை மாஸ்டர் தா எனக்கு கூறினர்.

ஜலால்பாத் குன்றிலிருந்து மெள்ள மெள்ள நடந்துவந்த அம்பிகா ஒரு வீட்டை அடைந்தார். அங்கே தலைமறைவாக இருந்தார். ஆனால் அங்குபோய்ச் சேர்ந்த சில நாட்களுக்குள்ளேயே அவரிருந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டை போலீஸ் படை சூழ்ந்துகொண்டது. அம்பிகா வீட்டிற்கருகில் நாணல் அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு குட்டையில் இறங்கி ஒளிந்துகொண்டார். ஒரு பகலும் ஒரு இரவும் நீரிலே வாழ்ந்தார், மூக்குமட்டும் நீருக்குவெளியே நீட்டிக்கொண்டு நின்ருர். ஆள் பலஹீனமடைந்தவர்; ரத்தக் குறைவு; உடலில் துப்பாக்கிக் குண்டுகளால் ஏற்பட்ட காயங்கள். இத்துடன் நீண்டநேரம் குட்டையில் மூழ்கிக் கிடந்ததன் பயனுக நல்ல சளி பிடித்துக்கொண்டது. வாயிலிருந்து இரத்தம் கக்க ஆரம்பித்துவிட்டார். அனைவருக்கும் கவலை. ஈரல் வியாதி ஏற்பட்டுவிட்டது என்ற கவலை. ஆனால் அம்பிகா தனக்கு கொடிய் நோய் ஏற்பட்டுவிட்டதென்பதாக ஒப்புக்கொள்ளவே மாட்டார். தன்னுடைய நோயைப்பற்றி தோழர்கள் கவலையுடன் பாடுபட்டு வருவதைக்காண சகியாது. நீண்டநாள் நோய் அவர் சுபாவத்தை மாற்றிவிட்டது. அடிக்கடி கோபம் கொள்வார். "அண்டர் கிரவுன்ட்" வாழ்க்கையில் அவரது குணத்தையும் பொறுத்துக்கொண்டு காலந்தள்ளுவது கடினமான காரியம். ஆனால் அவரைப்பார்த்துக்கொண்டு அவருக்கு சிகிச்சை செய்வதற்கு ஒரு ஆள் அவசியம். அவருக்கு ரொம்பவும் நெருங்கிய நண்பர் புட்டுதா என்று அழைக்கப்பட்டுவந்தவர் தாரகேஸ்வர். அவரை அம்பிகாவுக்குச் சிகிச்சை செய்யும் தோழராக்கினுர்கள்.

நோயாளிக்கு பழவகைகள்—ஆப்பிள் பழம், கொடிமுந்திரிப் பழம் முதலிய பழவகைகள்—கொண்டு வருவார்கள். அம்பிகா தா பிடிவாதமாக நிற்பார். தனக்கு வியாதியில்லை என்று காண்பிக்கவேண்டுமென்ற பிடிவாதத்துடன் தன் தட்டிலுள்ள பழங்களை எடுத்து தாரகேஸ்வருடைய தட்டில்போட்டு அவரை சாப்பிடச் சொல்வார். தாரகேஸ்வர் அவரை வேண்டிக்கொள்வார். சில சமயங்களில் தன்னுடைய தட்டில் பழங்களை வாங்கிக் கொள்வார். சாப்பிடுவதாகப் பாவனை செய்வார். அம்பிகா தா படுத்த படுக்கையில் கிடந்தார். தாரகேஸ்வர் ஜன்னலருகில் சென்று அம்பிகாவுக்குத் தெரியாதபடி பழங்களை வெளியே எறிந்துவிடுவார்.

இவ்வாறு கொஞ்சநாட்கள் கடந்தன. போலீஸார் அவர் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து அவரைக் கைது செய்து ஜெயிலுக்குக் கொண்டுபோனுர்கள். அப்பொழுதுதான் டவுன் வாசிகளுக்கு அவர் உயிருடனிருந்த செய்தி தெரியும். போலீஸார்

பிடித்த பின்னரும் அவர் கோழையுடன் ரத்தம் கக்குவது உண்டு. ஜெயில் டாக்டர் அது க்ஷயரோகமென்றார். அந்த சமயத்தில் அவர்மீதிருந்த முதல்கேஸ் விசாரணை அநேகமாக முடிந்துவிட்டது. ஆனால் அவர்மீது இன்னொரு கேஸைப் போலீஸார் போட்டிருந்தனர். ஸீரி சிறையில் வைக்கப்பட்டிருந்தார். விசாரணையும் சில நாட்கள் தள்ளிப்போடப்பட்டது.

விசாரணை நடக்க ஆரம்பித்தது. அச்சமயத்தில் என்னை போலீஸார் கண்டுபிடிக்க தீவிரமுயற்சி எடுத்துக்கொண்டிருந்தனர். என் பெயர் அடையாளங்களைக் குறிப்பிட்டு ஓடி ஒளிந்துள்ள ஜாபிதாவில் என்னையும் சேர்த்தனர். அம்பிகாவின் மீது நடக்கும் வழக்கைப்பற்றி மாஸ்டர் தாவைக் கேட்டேன். "அம்பிகா பாபுவை அவர்கள் தூக்குப்போட முடியாது. யமன் வாயிலிருந்து அத்தனை தடவைகள் தப்பித்து வந்த மனிதனை அவர்கள் தூக்கிலிட முடியாது. இந்தத் தடவையும் அவர் யமனுக்கு 'டிம்கி' கொடுத்து ஜெயித்துவிடுவார்" என்று கூறினர் அவர்.

அவருடைய கேஸை விசாரித்த ஸ்பெஷல் கோர்ட் அவருக்கு மரண தண்டனை விதித்தது. அப்பீலில் ஹைகோர்ட் அந்த தண்டனையை மாற்றியது. சர்க்காரே இறந்துபோன லிஸ்டில் சேர்த்த ஒரு மனிதனை, 'சிட்டகாங்' ஆயுதசாலைத் தாக்குதலுக்குப் பின்னல் பிடிபடவேண்டிய நபர்கள் ஜாபிதாவில் சேர்க்காத ஒரு மனிதனை, ஜனங்களனைவரும் இறந்ததாகக் கருதும் ஒரு மனிதனை—தண்டிக்க முடியாது என்று அம்பிகா தா தரப்பில் வாதம் செய்யப்பட்டது. சிட்டகாங் வழக்கில் மற்றவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் அவர்மீது சாற்றப்படவில்லை. இத்தனை நாட்களுக்குப் பின்னர் அவரையும் பிடித்து அவ்வழக்கில் ஒரு குற்றவாளியாக்கக்கூடாது என்று வாதித்தனர். மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக ஹைகோர்ட் மாற்றிற்று.

அவர் சிட்சிக்கப்பட்டு 15 வருடங்களாய்விட்டன. 15 வருடகால ஜெயில் வாழ்க்கை அவருடைய உடல் நலத்தைக் குன்றச் செய்துவிட்டது. எஞ்சியுள்ள உடல் நலத்தைக் காப்பாற்ற ஏற்பாடுகள் செய்யப்படாவிட்டால் அதிகநாள் ஜீவித்திருப்பது சந்தேகம் என்று சமீபத்தில் விடுதலையானவர்கள் கூறுகிறார்கள். இப்படியே இருந்தால் இன்னும் சில மாதங்கள்தான் உயிருடனிருப்பார் என்று தோன்றுகிறது. அஞ்சாநெஞ்சத்தின் உறுதியினல், தன்னுடைய தீரத்தினல் இந்த புரட்சிவீரன் பன்முறை யமனையே ஏமாற்றிவிட்டார். ஆனல் இன்றோ அவர் இளம்பருவத்தைத் தாண்டிவிட்டார். ஆரோக்கியம் குன்றிய உடலுடன் ஜீவனைக் காக்கப் போராடவேண்டும். மீண்டும் அவர் யமனை ஏமாற்றி

உயிர்வாழவேண்டுமென்ருல் அதற்கு நாம் உதவி அளிக்கவேண்டும். அவர் ஜீவித்திருக்கமுடியும் என்பது அவருடைய கையிலில்லே. நாம் அவருடைய விடுதலைக்கு என்ன செய்கிறேம் செய்வதைப் பொறுத்திருக்கிறது.

அப்புரட்சி வீரர்களின் விடுதலைக்காக ஒரு மாபெரும் இயக்கம், அனைவரும் பங்கெடுத்துக்கொள்ளும் இயக்கம், நடந்தால் அவருக்கு உற்சாகம் ஏற்படும். அவருடைய உள்ளம் மகிழ்ச்சி அடையும். நாம் வெற்றி பெரும் நன்னுள்வரை யமனை எதிர்த்துப் போராட ஊக்கம் ஏற்படும். 15 வருடங்களுக்கு பின்னர் அவருடைய விடுதலையை நாம் பெற்ருல் அளவில்லா ஆனந்தத்தை அளிக்கச் செய்யும்.

சாவித்திரி தேவி.

சாவித்திரி தேவி

1932-ம் வருடம் ஜூன்மாதம் 13-நதேதி நடந்த சம்பவம் இது. கவர்ன்மெண்டு படைகளை எதிர்த்து நேருக்கு நேர் போராடியபொழுது யுத்த தளவாட சாலை கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்டு, தலைமறைவாக வாழ்ந்த இருவர் மாண்டனர். அதே சமயத்தில் நம் படைகள் அரசாங்க படையின் தளபதியான காப்டன் காமிரான் என்பவனைப் பலியாக்கினர். இது டால்காட் என்ற ஊரில் இருந்த ஒரு ஏழை பிராமணன் வீட்டில் நடந்தது. வீட்டுக்கு மூதியவர் இறந்து நீண்டநாள் ஆகிவிட்டது. வீட்டில் விதவையும், அவள் பிள்ளையும் மணமான பெண்ணுமே வாழ்ந்து வந்தனர். இச்சம்பவம் நடந்தபிறகு அவ்விதவை இரு குழந்தைகளுடனும் கைது செய்யப்பட்டாள். சில நாட்களுக்கு பிறகு, அந்த வீட்டுப் பெண் அரசாங்க சாட்சியாக மாறிவிட்டாள் என அறிந்தோம். போலீஸார் என்ன கொடுப்பதாக வாக்களித்த போதிலும், ஆசை வார்த்தைகள் சொன்னபோதிலும், விதவையிடமிருந்தும் பிள்ளையிடமிருந்தும் எவ்விதத் தகவலும் எள்ளளவும் வாங்க முடியவில்லை. அவர்களின்பேரில் எங்களுக்கு மரியாதையும், மதிப்பும் பன்மடங்காகப் பெருகியது. கல்வி வாசனையில்லை! ஏழை!! ஆனால் இந்த மனதைமயக்கும் ஏராளமான பொன் சன்மானம் கிடைக்குமென்பதை மனதாலும் சிந்திக்க எப்படி இவ்விருவரும் விரும்பவில்லை? பிறகு சொல்லொணு இன்னல்களை அவர்களுக்கு கொடுத்தபோதிலும் எப்படி வாய் மூடி மௌனிகளாய் இருந்தனர்! அவள் கிராமத்தில் சண்டைக்காரி என்று பட்டம் பெற்றவள். அவளுக்கு சுதேசி பாயுக்களிடம் இருந்த ஆழ்ந்த அன்பும், அபிமானமும் இங்கு, சொல்ல முடியாத கஷ்டத்தையும், சகிக்கமுடியாத தண்டனையையும் அவள் அனுபவித்ததிலிருந்து நாங்கள் நன்கு உணர்ந்தோம். எங்களுக்கு அவ்விதவை தேவியாக விளங்கினாள்.

மூன்று மாதங்கள் ஓடி மறைந்தன. பகர்தலி கிளப் அருகில் ஆண் உடையில் நான் கைதியாக்கப்பட்டேன். அதற்கு மறு வாரத்தில்தான் பிரீதியின் தலைமையில் அந்த கிளப், நான் கைதி

யான இடத்திலிருந்தே தாக்கப்பட்டது. என்னைக் கைது செய்து சிறைக்கு அனுப்பிவிட்டனர்.

நான் சிறையில் பெண்கள் வார்டில் நுழையுமுன், ஒரு மத்தியதர வயதான விதவை எதிர்நோக்கி ஓடி வந்து "நீ ஒரு சுதேசியா" என்று கேட்டாள். அவளுடைய தலைமுதல் கால் வரை பருக்களால் விகாரமடைந்திருந்தது. "ஆம்" என்று 'வெட்டாக' நான் பதில் சொல்லிவிட்டு என் ஜெயில் அறைக்கு பெண் வார்டர் அழைத்துச் செல்ல, போய்விட்டேன். என்னுடைய வார்த்தை அவளை தயங்க வைத்துவிட்டது.

ஆனால் என்னை அவள் விட்டுப் போவதாயில்லை; என்னை விடாமல் பின் தொடர்ந்தாள். போலீஸைப்பற்றி என்னமோ சளசளவென்று பேசிக்கொண்டிருந்தாள். அவர்களிடம் ஜாக்கிரதை வேண்டுமென்று அவள் சொன்ன எச்சரிக்கை என் உள்ளத்தை இன்றும் தொடுகிறது. "அவர்கள் உன்னையும் வதைப்பார்கள். ஆனால் அப்பொழுதும் நீ அவர்களுக்கு ஒன்றும் சொல்லக்கூடாது. உன்னை தூக்கிலிடப்போகிறேன் என்றும் பயமுறுத்துவர். ஆனால் நீமட்டும் கலங்கி மனம்விட்டு விடக்கூடாது."

போலீஸ் சித்திரவதை அவளுடைய மூளையைக் குழப்பிவிட்டது. ஆனால் என்றும் அவள் தைரியத்தையும், மனோதிடத்தையும் விடவில்லை. அடக்கி வைத்திருந்த கோபமும். ஆங்காரமும் பலவகைகளில் அவளிடத்தில் வெளிப்படும்! போலீஸ் சித்திரவதைப்பற்றி அவள் பாடின பாட்டின் சில வரிகள் இது.

கொடுங்கோலர் குழைந்துவந்தே
உன் அருகே உட்காருவர்
நயத்தாலும் பயத்தாலும் வார்த்தை பேசி
உன்னுயிரைக் கொள்வர் இறுதியாக.

அவளை சிறையில் மோசமாக நடத்தினர். இருந்தபோதிலும் அவள் தன் எண்ணங்களிலேயே ஆழ்ந்துவிடுவாள். மற்றவைகளில் கவனம் செலுத்தமாட்டாள். ஆனால் என்னை பார்க்க யாராவது ஆபீஸில் இருப்பதாக செய்திவந்தால் என்னிடம் வந்து "போலீஸ் சூழ்ச்சிகள் பலவிருக்கும், ஜாக்கிரதை" என்று எச்சரிக்கை செய்யத் தவறவே மாட்டாள். சில காலத்திற்குபின் நான் ஜாமீனில் விடுதலையானேன். நான் வெளியில் இருந்தபொழுது, அவளுக்கும், அவள் பிள்ளை ராமகிருஷ்ணுவுக்கும், நான்கு வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது என்று கேள்விப்பட்டேன்.

நான் வெளிவந்த ஒரு மாதத்தில் தலைமறைவாக வாழ வீட்டி லிருந்து தப்பிவிட்டேன். நான் மறுபடியும் கைதியானபொழுது சிட்டகாங் ஆயுதசாலைத் தாக்குதல் சம்பந்தமாக நடந்த இரண் டாவது வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றேன்.

ஒன்றரை வருஷ காலமாகச் சிறைக்குச் சிறை மாற்றப்பட் டேன். பிறகு மிதுனபுரி ஜெயிலில் அவளைச் சந்தித்தேன். இன்றும் போலீஸ் சூழ்ச்சிகளைப்பற்றியும், ஜெயில் அதிகாரி களைப்பற்றியும் எச்சரிக்கை செய்ய மறந்தாளில்லை.

அவளுக்கு முதிர்ந்த துணிவும், பலமும் உண்டு. தனக்கு கிடைக்கவேண்டியவை — நியாயமாக கிடைக்கவேண்டியவை என்று அவளுக்கு பட்டதைப் பெற, ஜெயில் அதிகாரிகளி டம் தன்னால் முடிந்த மட்டும் போராடித் தீர்த்துவிடுவாள். அவ ளுக்கு தேவை என்று பட்டதை கொடுத்துத்தான் தீரவேண் டும். அநேக தடவைகளில் ஜெயில் அதிகாரிகள் விட்டுக்கொடுக் கவே வேண்டியிருந்தது. ஒரு கிழவிக்கு ஜெயில் விதிப்படி கொடுக்கவேண்டிய தண்டனைகள் அனைத்தையும் அவள் முனங் காமல் ஏற்றுக்கொண்டிருக்கிருள். இருந்தாலும் தன் கோரிக் கைகளைப் பெற சண்டை போடுவதை நிறுத்தமாட்டாள். வேறு வழியின்றி ஜெயில் அதிகாரிகள் இணங்க வேண்டியிருந்தது. அவ்வளது தேவைகளும் அதிகமல்ல. அரிசி வேண்டுமென்று அவள் ஒருமுறை போராடினுள். எங்கள் நாட்டில் விதவைகள் அட்டா அரிசி தவிர மற்றவை உபயோக்கக்கூடாது என்பது சமூக விதி. அதுபோக இளங் காய்கறி, சுற்றத்தாருக்கு எழுத ஒரு போஸ்ட் கார்டு, அல்லது அதே சிறையில் வாடி வந்த தன் பிள்ளையைப் பார்க்க அனுமதி இவைகள்தான் அவள் தேவை கள் எல்லாம்.

அவள் அழுது நான் கண்டதில்லை. மாஸ்டர் தா, நிர்மலதா. பிரீதி, ராமகிருஷ்ண தா இவர்களைப்பற்றியே அவள் கண்ணீர் விட்டதை நான் பார்த்திருக்கிறேன். குறிப்பாக தன் வீட்டி லேயே மாண்டுபோன ராமகிருஷ்ண தாவை நினைக்கும்பொழுது கண்ணீர் பெருக்கு எடுத்து ஓடும்.

அவள் பிள்ளை க்ஷயரோகத்தில் சிறையில் மாண்டுவிட்டான், அவன் 3—வது வகுப்புக் கைதியாக இருந்ததால் எண்ணை இறக் கும் மிஷினில் உழைக்கடிக்கப்பட்டான். கடின வேலை திணிக் கப்பட்டு க்ஷயரோகம் இரண்டே மாதத்தில் வாட்டி உயிர் பறித்தது.

ஆறு மாதத்திற்கு மீண்டும் மீண்டும் அவள் கேட்டும் பிள்ளை யைக் காண அனுமதி மறுத்துவிட்டனர். பொய்க் காரண

மெல்லாம் ஜெயில் அதிகாரிகள் கூறினர். ஜெயில் விதியை மீறினதற்காக ஒற்றைக் கொட்டடியில் போட்டிருப்பதாக சாக்குப் போக்கு கூறினர். பையன் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, பிள்ளையிடம் தாயை இட்டுச் சென்றனர். ஆள் அவளை ஆபீசிலிருந்து கூப்பிட வந்தபொழுது அவள் சந்தோஷமாய் இருந்தாள். நான்கு வருடம் ஓடிவிட்டது. சிறைவாசம் முடியப் போவதால் சிட்டகாங் சிறைக்கு மாற்றி விடுதலை செய்யவே தன்னை அழைத்திருக்கிறார்கள் என்று பாபம்—அக்கிழவி நினைத்தாள்.

அவளுடைய பிள்ளையைப்பற்றி தகவல் முற்றும் கிடைக்கவில்லை. அவள் ஆபீஸிலிருந்து ஓலமிட்டுக்கொண்டே திரும்பி வந்தாள். பிறகு விசாரித்ததில், அவள் பிள்ளை ஆபத்தாக இருப்பதாகவும், யாராவது சுற்றத்தார் பொறுப்பேற்றுக்கொண்டால் விடுதலை செய்வதாகவும் ஜெயில் அதிகாரிகள் கூறினராம். மாமாவுக்கு தந்தி யடிக்கும்படியும், வெளிச் சென்றால் கண்டிப்பாக குணமாகிவிடுமென்று தனக்குப் படுவதாகவும் பிள்ளை தாய்க்குச் சொன்னான்.

தாயிடமும் பிள்ளையிடமும் இருந்த முதல் ஆளுக்கு நாலணா தான். தந்திக்கு குறைந்தது 12 அணா தேவை. ஜெயில் அதிகாரிகள் தாங்களும் நாலணா கொடுக்க மறுத்தனர். ஆபீஸில் எங்கள் பேரில் இருந்த எங்கள் பணத்தை அவர்களுக்கு கொடுங்கள் என்று வேண்டியும் மறுத்துவிட்டனர். கடிதமெழுத கார்டு மட்டுமே கொடுத்தனர். அவளும் கடிதம் எழுதினாள்.

ஆனால் பதில் மட்டும் வரவேயில்லை. தினம் தாய் சென்று பிள்ளையைப் பார்ப்பாள். பிள்ளை ஏக்கமாக யாராவது வந்தனரா என்று தாயைப் பார்ப்பான். சாவதற்கு முதல் நாள் பையன் தாயைப் பார்த்து "ஒருவரும் வருவது நிலையில்லை, நான் இறந்தபிறகு யார் உன்னை எந்தச் சொந்தக்காரர் கவனித்துக் கொள்ளப் போகிறார்கள். விடுதலையானால் அவர்களிடம் போகாதே. நான் இறந்தபிறகு ஊரில் ஒருவருடனும் சண்டை போட்டுக் கொள்ளாதே" என்று கூறினான். மறுநாள் துக்கச் செய்தி கிடைத்தது. பிள்ளை மாண்டுவிட்டான். எவ்வளவோ அனுபவத்தையும், வாழ்வையும் சாவையும் கண்ட இந்த மூதாட்டிக்கு இது ஒரு அதிர்ச்சியாக இருந்தது. தனது கஷ்ட காலத்தில் சுற்றத்தார் புறக்கணித்த ஏமாற்றம் அவளை வாட்டி விட்டது.

காலம் அவள் துக்கத்தை ஆர வைத்தது, சில நாட்களில் அவள் என்னைத் தனியே அழைத்து "அம்மா! நான் யாரிடமும்

போகப்போவதில்லே. சுதேசி பாபுக்களுடனே இருந்துவிடுகிறேன் " என்ருள்.

அவளுக்கு சுதேசிகளேப்பற்றி ஒரு விநோதமான நம்பிக்கை. சுதேசி பாபுக்கள் கண்ணியமானவர்கள், தூய்மையானவர்கள், நம்பிக்கைத் துரோகம் செய்யாதவர்கள்; இவர்களுக்கு யார் ஹானி விளேவித்தபோதிலும் கண்டிப்பாக பன்மடங்கு ஹானியும், துன்பமும் அவர்களுக்குக் கிடைக்கும் என்பது அவளுடைய திடமான நம்பிக்கை. நான், சிட்டகாங் போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜோகேந்திர குப்தா க்ஷயரோகத்தால் இறந்தான் என்று சொன்னபொழுது தன் நம்பிக்கை சரியானது என்று எனக்கு எடுத்துக் காட்டிவிட்டு தன் நம்பிக்கையை ஸ்திரப்படுத்திக்கொண்டாள்.

ஜோகேந்திர குப்தா அரசியல் கைதிகளே வாட்டிய கொடிய முறைக்குப் பேர் பெற்றவன். அவன் அரசியல் கைதிகளுக்கு மறைவிடம் கொடுத்தவர்களுக்கு குறிப்பாக பில்காட் பகுதியில் இருந்தவர்களுக்கு செய்த கொடுமையை எப்படி வர்ணிப்பது? ஜெயிலில் நான் பலமுறை இந்தக் கிழவி கடவுளின் முன் பிரார்த்தனே செய்வதைக் கேட்டிருக்கிறேன், போலீஸில் இருக்கும் யாவருக்கும், குறிப்பாக ஜோகேந்திர சிங்குக்கும் சாவு வர வேண்டுமென்று வேண்டுவாள். இதே ஜோகேந்திர சிங்குதான் புரட்சிக்காரர்களேப்பற்றி முழு தகவல்கள் கொடுத்தால் ஏராளமான பணம் தருவதாக ஆசை காட்டியவன். இதே சூழ்ச்சியாலும், மற்றும் பல ஏமாற்றத்தாலும் இவள் பெண்ணே கவர்மெண்ட் சாட்சியாக மாற்றியவனும் இவன்தான். அவன் இறந்தான் என்று நான் சொன்னவுடனே " அது வந்து தீரும் என்று எனக்குத் தெரியும். சுதேசியர்களே ஹிம்சித்தால் ரத்தம் கக்கி மாள்வதைத் தவிர வேறு மார்க்கமில்லே " என்று பளிச்சென்று பதில் சொன்னுள்.

பிள்ளே இறந்த சில மாதங்களில் அவள் விடுதலேயானுள். சொந்த ஊருக்குச் சென்ருள். சுற்றத்தார் நெருங்கினுர்களில்லே. அவளுக்கு வாழ்க்கைக்கே போதுமான வசதியின்றி சொல்ல முடியாத கஷ்டங்கள் அனுபவிக்கிருள் என்று சிறையுனுள் கேள்விப்பட்டேன். தன்னுடைய இடத்தில் ஒரு சிறு குடிசை கட்டிக்கொண்டு, பிச்சையைக் கொண்டு, தானத்தைக் கொண்டு எப்படியோ வாழ்கிருள் என்றும் தெரியவந்தது.

நான் வெளிவந்தவுடன் என்னே வந்து அவள் சந்தித்தாள். தன் நிலேமை முழுதும் கூறினுள். ஒருவேளே சாப்பாடாவது கிடைக்கும் வகையில் தனக்கு வேலே ஏதாவது கிடைக்க வழி

உண்டா என்ருள். எப்படியும் என்னல் வேலைக்கு உறுதி கொடுக்க முடியவில்லை. என்ருலும் என்னுடைய ஜில்லா தோழர்களிடம் அவளுடைய பழைய சேவை அபாரமானது. அவளுக்கு நாம் ஏதாவது செய்யவேண்டுமென்று எடுத்துச் சொன்னேன்.

அப்பொழுதுக்கப்பொழுது உதவி செய்து வந்தோம். நான் எப்பொழுதாவது அவள் கிராமத்திற்குச் செல்லும்பொழுது பிறர் தனக்கு கொடுக்கும் தொல்லைகளைப்பற்றி கூறுகிருள், பல சமயங்களில் நம் ஆட்களே அவளிடம் பாராமுகமாய் இருப்பதைக் கேட்கவும், பார்க்கவும், எனக்கு வெட்கமாகவும், அதிர்ச்சியாகவு மிருக்கிறது.

டல்காட்டில் மாதர் சங்க (நாரிசமதி) கிளை ஆரம்பித்தவுடன் கிழவியும் அதில் சேர்ந்துகொண்டாள். ஆனல் மாதர் சங்கத்திற்கு அவளுக்கு உணவளிக்க போதிய வசதியில்லை. அவள் நிலைமை கேவலமாகவே பஞ்சகாலத்தில் அவளும் இலவச உணவுச் சாலைக்குப் போகவேண்டியதாயிற்று. ஆனல் வேலை செய்யாமல் எனக்கு உணவு வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். அவளே காத்திருக்கும் கும்பலுக்கு சமைக்கும் வேலையை ஏற்றுக்கொண்டாள். வேலைக்கு கூலியாக உணவு பெறுகிருள்.

அவள் நமது வேலையில் ஒத்துழைக்கிருள். கம்யூனிஸம் என்ருல் என்ன என்பது அவளுக்குத் தெரியாது. நாம் நம் மக்களை நேசிக்கிரேம், நம் தேச சுதந்திரத்திற்காக விடாமல் போராடி வருகிரேம், சமாதானத்துக்காகவும், யாவருடைய சுபிக்ஷத்திற்காகவும் நிற்கிரேம் என்பது மட்டுமே அவளுக்குத் தெரியும். கம்யூனிஸம், பயங்கரவாதம் இரண்டுக்குமுள்ள வித்தியாசங்களைப்பற்றியும், ஒன்றும் அறியாள். ஆனல் ஜனங்களுக்கு சேவை செய்பவர்களின் பின் நிற்க தயாராயிருக்கிருள்.

அந்த முறையில்தான் நம்முடைய மத்தியில் மீண்டும் அவள் இருக்கிருள். நமது புறக்கணிப்பும், பராமுகமும் அவளை நம்மிடமிருந்து விரட்டிவிட முடியவில்லை. மக்களை நேசிக்கும் தேசபக்தர்களின் உள்ளத்தில் பொங்கும் இயற்கையான தேசபக்தி அவள் உள்ளத்திலே நாம் கண்டோம்.

Janasakti Press Q. H. M. S. 374

Tamilnad Committee of Communist Party of India P.H. No. M.S. 351

Jan., 1946.